ஆராய்ச்சிப் பள்ளி, சர்க்கரை தொழில்நுட்ப பயிற்சி அளித்து வருகிற காரணத்தால் அந்தப் பயிற்சி நிலையத்திலே தேவைப் பட்டவர்கள் சேரக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் தனியாக நடத்துவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

திருச்சி மத்திய சிறைச்சாலைக்குக் குடிநிர் வழங்குதல்

* 8721 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது நிறைவுறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜூன் 1991-ல் திட்டம் நிறைவுறும் என எதிர்பார்க் கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிறைக்குக் குடிநீர்த் திட்டம் 1983-ஆம் ஆண்டிலே ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்காக ரூ. 80 இலட்சம் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுவிட்டது. ஆனால் 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலும் இந்தத் திட்டப் பணிகள் எதுவும் செயல் படுத்தப்படவில்லை என்று தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது. ஏன் இவ்வளவு நீண்ட காலதாமதம் ஆனது ? இந்தப் பணி எப்போது தொடங்கப்பட்டது. அப்போது அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு ? இப்போது எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு பற்றிய குறிப்பு இப்போது இல்லை. ஆனால் அரசாங்கம் எடுத்துள்ள முயற்சியின் காரணமாக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் திட்டம் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1990 ஆகஸ்ட் 21]

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்திற்குப் பணம் ஒப்படைக்கப்பட்ட பிறகும் குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தாததன் காரணமாக ஆண்டுதோறும் இந்தச் சிறைக்குக் குடிநீர் சப்ளை செய்ததற்காக லாரிகளுக்கு பல இலட்சக் கணக் கான ரூபாய் செலவு ஏற்பட்டிருக்கிறது. இது வீண் நஷ்டம் என்றும் தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது. அதன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத் தப்பட்ட அந்த ரூ. 80 இலட்சம் தொகைக்கு வட்டியேனும் சிறைத்துறை பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கான அறிவிப்புகளை அரசு, இலாக்கா விற்குத் தெரிவித்திருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ஜெயிலில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயங்கிக் கொண்டிருந்தது. தற்போது, இரண்டாண்டுக் காலமாக இயங்க வில்லை. அது பற்றி அரசுக்குத் தெரியுமா? அதை இயங்க வைப்பதற்குத் திட்டம் எதுவும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காவிரி ஆற்றிலிருந்து திருச்சி சிறைக்குத் தண்ணீர் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் அதற்கான நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பற்றிய குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துத் தெரிவிக்கப்படும்.

LEGISLATURE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* 8105 திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) மயிலாடுதுறையைத் தலைமை இடமாகக் கொண்டு வள்ளியம்மை மாவட்டம் என பெயரிடப்படுமா ?